## 2.39 1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தை செயல்படுத்துவதற்கு ஊராட்சி ஒன்றியங்களில் பணி இடங்கள் அமைப்பை மாற்றி அமைத்தல்

ஊரக வளர்ச்சி (இ5) துறை

அரசாணை (நிலை) எண். 180 நாள் : 9.6.1997

படிக்க :

1. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசாணை எண் 1161 நாள் 21.5.64
2. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசாணை எண் 598 நாள் 24.7.87
3. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசாணை எண் 653 நாள் 13.8.87
4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசாணை எண் 230 நாள் 15.10.96
5. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசாணை எண் 263 நாள் 27.12.96
6. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசாணை எண் 75 நாள் 14.3.97
7. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசாணை எண் 92 நாள் 26.3.97
8. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசாணை எண் 93 நாள் 26.3.97
9. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசாணை எண் 137 நாள் 2.5.97

**ஆணை**

கிராமங்கள் அளவில் ஊராட்சிகள், இடை நிலையில் வட்டார ஊராட்சிகள், மாவட்ட அளவில் மாவட்ட ஊராட்சிகள் என மூன்று அடுக்கு ஊராட்சி நிர்வாக முறை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994ன்படி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி, ஒவ்வொரு நிலையில் உள்ள ஊராட்சிகளும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டவையும் தனித்தனியாக இயங்குபவையும் ஆகும். ஒவ்வொரு நிலைக்கும் தனித்தனி கடமைகளும், பொறுப்புகளும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அதற்கு ஏற்ப, ஏற்கெனவே ஊராட்சி ஒன்றிய அளவில் இருக்கும்படி அமைப்பை மாற்றி அமைப்பது குறித்து அரசு ஆய்வு செய்து, சில முடிவுகள் மேற்கொண்டுள்ளது. அவைகளுக்கு ஏற்ப, கீழ்க்கண்டவாறு ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

2. ஏற்கெனவே இருக்கும் ஊராட்சி ஒன்றிய பணி அமைப்பில், ஊர்நல அலுவலர் பணியிடங்கள் விரிவாக்கப் பணிகளுக்காக பல ஆண்டுகளுக்கு முன் ஏற்படுத்தப்பட்டவை. தற்போது, ஒரு பணிவிதிகளின்படி (Single Service Rules) இப்பணியிடங்களில் பணியாற்றுபவர்களும், இளநிலை உதவியாளர்களும், உதவியாளர்களும் ஒருவருக்கு ஒருவர் பணி மாறுதல் செய்து பணி அமர்த்தப்படுவதோடு, ஊர்நல அலுவலர் பணியிடங்களுக்கு தனியாக ஆள் தேர்வு செய்யப்படுதில்லை. ஏனவே, தற்போது, முதல் நிலை ஊர்நல அலுவலர் பணியிடங்களை சம ஊதிய விகிதம் பெறும் உதவியாளர் என்றும், இரண்டாம் நிலை ஊர்நல அலுவலர் பணியிடங்களை சம ஊதிய விகிதம் பெறும் இளநிலை உதவியாளர்/இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் என்றும் பெயர் மாற்றம் செய்து அரசு ஆணையிடுகிறது.

3. இளநிலை உதவியாளர் பணியிடங்கள் அரசுப்பணியில் இளநிலை உதவியாளர் மற்றம் தட்டச்சர் என்று ஏற்கனவே பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியங்களில் ஏற்கெனவே இருக்கும் இளநிலை உதவியாளர் பணியிடங்கள், 1.4.74 முதல் அரசுடப் பணியிடங்களாக மாற்றப்பட்டவை ஆகும். இப்பணி இடங்களில் பணியாற்றும் பலர் தட்டச்சு தேர்ச்சி பெற்றவர்களாக இருக்க மாட்டார்கள் எனவே இந்த அரசாணையில் கீழ்வரும் பத்திகளில் ''இளநிலை உதவியாளர்'' என்று குப்பிடப்படும் இடங்களில் எல்லாம் அப்பணியிடங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளவர்கள் தட்டச்சு தேர்ச்சி பெற்றவர்களா, அல்லது தேர்ச்சிப் பெறாதவர்களா என்பதைப் பொறுத்து, ''இளநிலை உதவியாளர் அல்லது இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர்'' என்று பொருள் கொள்ள வேண்டும்.

4. சமூக நல விரிவாக்க அலுவலர், கால்நடை வளர்ச்சி விரிவாக்க அலுவலர், கூட்டுறவு விரிவாக்க அலுவலர், சத்துணவு விரிவாக்க அலுவலர், ஊர்நல அலுவலர் (மகளிர்) போன்ற பணியிடங்களைத் தவிர ஊராட்சி ஒன்றிய அளவில் தற்போது இருக்கும் பொதுவான நிர்வாகப் பணியமைப்பு பின் வருமாறு :

## 2. IMPORTANT G.Os

| வ.எண். | பணியின் வகை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | வட்டார வளர்ச்சி அலுவலர் | 1 |
| 2. | கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர் | 1 |
| 3. | துணை வட்டார வளர்ச்சி அலுவலர் | 1 |
| 4. | விரிவாக்க அலுவலர் (நிர்வாகம்) | 1 |
| 5. | விரிவாக்க அலுவலர் (ஊராட்சிகள்) | 1 |
| 6. | விரிவாக்க அலுவலர் (சிறுசேமிப்பு, மக்கள் தொடர்பு) | 1 |
| 7. | விரிவாக்க அலுவலர் (ஆதிதிராவிடர் நலம்) | 1 |
| 8. | விரிவாக்க அலுவலர் (ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம்) | 1 |
| 9. | உதவியாளர்கள் | 2 |
| 10. | முதல்நிலை ஊர்நல அலுவலர்கள் | 5 |
| 11. | இளநிலை உதவியாளர்கள் | 4 |
| 12. | இரண்டாம் நிலை ஊர்நல அலுவலர்கள் | 5 |
| 13. | கணக்கர்கள் | 2 |
| 14. | காசாளர் | 1 |
| 15. | தட்டச்சர் | 1 |
| 16. | ஆவண எழுத்தர் | 1 |
| 17. | அலுவலக உதவியாளர்கள் | 4 |
| 18. | ஊர்தி ஓட்டுநர் | 1 |

5. ஊராட்சி ஒன்றிய அளவில் ஏற்கனவே இருக்கின்ற பொதுவான பணி அமைப்பை தற்போது (1) ஊராட்சி ஒன்றியம் (வட்டார ஊராட்சி) தொடர்பான பணிகளைச் செய்ய வட்டார வளர்ச்சி அலுவலர் தலைமையிலும், (2) கிராம ஊராட்சிகள் தொடர்பான பணிகளை கண்காணிக்கவும், தணிக்கை செய்யவும் கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர் தலைமையிலும், இரு பிரிவுகளாக கீழ்க்கண்டவாறு மாற்றி அமைக்குமாறு மாவட்ட ஆட்சியர்களுக்கு ஆணையிடப்படுகிறது.

**அ. ஊராட்சி ஒன்றியம் (வட்டார ஊராட்சி) பிரிவு**

| வ.எண். | பணியிட வகை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | வட்டார வளர்ச்சி அலுவலர் | 1 |
| 2. | விரிவாக்க அலுவலர் (நிர்வாகம்) | 1 |
| 3. | விாக்க அலுவலர் (சிறுசேமிப்பு , மக்கள் தொடர்பு) | 1 |
| 4. | விரிவாக்க அலுவலர் (ஆதிதிராவிடர் நலம்) | 1 |
| 5. | உதவியாளர்கள் | 4 |
| 6. | இளநிலை உதவியாளர்கள் | 3 |
| 7. | கணக்கர் | 1 |
| 8. | காசாளர் | 1 |
| 9. | தட்டச்சர் | 1 |
| 10. | இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் | 1 |
| 11. | ஊர்தி ஓட்டுநர் | 1 |
| 12 | ஆவண எழுத்தர் | 1 |
| 13 | அலுவலக உதவியாளர்கள் | 2 |

ஆ. கிராம ஊராட்சிகள் பிரிவு

கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர் – 1

| **நிர்வாகம், ஆய்வு, பணிகள் முன்னேற்றம், கண்காணிப்பு** | | | **தணிக்கை** |
|---|---|---|---|
| விரிவாக்க அலுவலர் (ஊராட்சிகள்) | – | 1 | துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) –1 |
| விரிவாக்க அலுவலர் (ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டம்) | – | 1 | உதவியாளர் –1 |
| கணக்கர் | – | 1 | |
| உதவியாளர்கள் | – | 2 | |
| இளநிலை உதவியாளர் | – | 1 | |
| இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் | – | 1 | |
| அலுவலக உதவியாளர்கள் | – | 2 | |

6. கூடுதலான எண்ணிக்கையுடைய ஊராட்சிகள் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில், ஏற்கெனவே இருக்கும் ஒவ்வொரு கூடுதல் விரிவாக்க அலுவலர் (ஊராட்சிகள்) பணியிடம், தொடர்ந்து, கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர் நிர்வாகக் கட்டுப்பாட்டில் இருக்கும். இவருடைய பணியில் எவ்வித மாற்றமும் இல்லை.

7. ஊராட்சி ஒன்றிய நிர்வாகப் பணி அமைப்பு குறித்து ஏற்கனவே இருக்கின்ற ஆணைகள் இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகின்றன. இனிமேல் மேற்கண்ட பொதுவான நிர்வாகப் பணி அமைப்புதான் ஒரேமாதிரியாக அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் இருக்க வேண்டுமென்று ஆணையிடப்படுகிறது.

8. ஊராட்சி ஒன்றிய பணி அமைப்பில், ஏற்கனவே இருக்கும் பணியிடங்களான விரிவாக்க அலுவலர் (கால்நடை வளர்ச்சி), விரிவாக்க அலுவலர் (கூட்டுறவு), விரிவாக்க அலுவலர் (சத்துணவு), விரிவாக்க அலுவலர் (சமூக நலம்), விரிவாக்க அலுவலர் (மகளிர்), ஆகியவையும், மேற்கண்ட விரிவாக்க அலுவலர்களுக்கு உதவியாக வேறு பணியிடங்கள் இருந்தால் அவைகளும் ஊரக குடிநீர் திட்ட பராமரிப்பு தொடர்பான பொருத்துநர், மின்பணியாளர், தையல் ஆசிரியைகள், பள்ளி நடத்தாட்டிகள் போன்ற பணியிடங்களும், இதைத்தவிர ஒன்றிய பொது நிதியிலிருந்து ஊதியம் வழங்கப்படும் வேறு ஏதேனும் பணியிடங்கள் இருந்தால், அவைகளும் வட்டார வளர்ச்சி அலுவலர் கட்டுப்பாட்டில் தற்போதைக்கு இருக்கும்.

9. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் உள்ள இரு ஒன்றியப் பொறியாளர் மற்றும் இரு பணி மேற்பார்வையாளர்களில், ஒரு ஒன்றியப் பொறியாளரும் ஒரு பணி மேற்பார்வையாளரும் கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர் தலைமையிலான ஊராட்சிப்பிரிவிலும், ஏனைய ஒன்றியப் பொறியாளரும், பணிமேற்பார்வையாளரும், சாலை ஆய்வாளர்களும் வட்டார வளர்ச்சி அலுவலர் தலைமையிலான ஊராட்சி ஒன்றியப் (வட்டார வளர்ச்சி) பிரிவிலும் செயலாற்றுவார்கள்.

10. ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களும், தச்சு கொல்லு பட்டறைகளும் ஊராட்சி ஒன்றிய (வட்டார ஊராட்சி) பிரிவின் கட்டுப்பாட்டில் செயல்படும்.

11. மேற்கண்டவாறு பணி அமைப்பை மாற்றி அமைக்கும் பொழுது மேலே கூறிய பணியிடங்களை தவிர ஏதேனும் இளநிலை உதவியாளர் / இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பணியிடங்கள் இருந்தால், அவைகளை பயன்படுத்துவது குறித்து அரசு தனியாக ஆணைகள் வெளியிடும்வரை, கிராம ஊராட்சிகள் பிரிவில் பயன்படுத்தலாம்.

12. ஏதேனும் ஊராட்சி ஒன்றியத்தில், மேலே பத்தி 5(அ) மற்றும் 5(ஆ)–ல் நிர்ணயிக்கப்பட்ட பணியிட எண்ணிக்கையைவிட, ஏதேனும் அரசு பணியிடம் ஏற்கெனவே குறைவாக இருந்தால், மேலே நிர்ணயிக்கப்பட்டதைவிட கூடுதல் பணியிடங்கள் இருக்கும் ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து மாறுதல் செய்து, குறையை நிறைவு செய்ய வேண்டும்.

13. மேற்கண்டவாறு பணி அமைப்பை மாற்றி அமைத்து, புதிய நடைமுறை 1.7.97 முதல் அமுலுக்கு கொண்டு வரவேண்டும். மேலே பத்தி 5 முதல் 11 வரை குறிப்பிட்டுள்ள பணியிடங்களை தவிர வேறுவகை அரசு பணியிடங்கள் இருந்தால், அவைகளின் எண்ணிக்கை, அவை காலியாக உள்ளனவா, இல்லையா பற்றிய ஊராட்சி ஒன்றியவாரி விவரங்களை, ஊரக வளர்ச்சி இயக்குநருக்கும், அரசுக்கும் மாவட்ட ஆட்சியர்கள், 15.7.97–க்குள் தெரிவிக்க வேண்டும். காலியாக இருக்கும் பணியிடங்களில் யாரையும் பணி அமர்த்தக் கூடாது.

14. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும், உள்ள ஊராட்சி ஒன்றியப் பணியிடங்கள் எத்தனை அவை அரசின் (அல்லது உரிய அதிகாரியின்) அனுமதி பெற்றவையா, இல்லையா, அனுமதி பெறப்பட்ட ஆணை எண் மற்றும் நாள் ஆகிய பணியிட வகைவாரி விபரங்களையும் ஊரக வளர்ச்சி இயக்குநருக்கும், அரசுக்கும், மாவட்ட ஆட்சியர்கள் 15.7.97க்குள் தெரிவிக்க வேண்டும். பணி அமைப்பை மாற்றி அமைக்கும் போது, முறையான அனுமதி பெறப்படாத பணியிடங்களின் விபரம் 15.7.97க்குள் தெரிவிக்க வேண்டும். முறையான அனுமதி பெறப்படாத பணியிடங்களில் ஏதேனும் காலியாக இருந்தால் அவைகளை நிச்சயமாக நிரப்பக்கூடாது.

15. மாற்றி அமைக்கப்பட்ட பணியமைப்பில் இருபிரிவுகளுக்கும் பணி ஒதுக்கீடு குறித்த மாதிரி ஒன்று மாவட்ட ஆட்சியர்களின் வழிகாட்டுதலுக்காக இணைக்கப்பட்டுள்ளது. பத்தி 5ல் நிர்ணயிக்கப்பட்ட பணி அமைப்பிலிருந்து மாறுபடாது. மாவட்ட ஆட்சியர்கள் மாதிரி பணி ஒதுக்கீட்டில் மாறுதல் செய்யலாம். மாவட்ட ஆட்சியர்கள், களநிலை, பணிப்பளு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, நன்கு ஆய்வு செய்து, ஒவ்வொரு பணியாளருக்கும் கடமைகளும் பொறுப்புகளும் நிர்ணயித்து ஆணைகள் வெளியிட வேண்டும். அவ்விதம் வெளியிடப்படும் ஆணைகளின் படிகளை 1.7.97–க்குள் ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அனுப்பவேண்டும். புதிய பணி அமைப்பிற்கு ஏற்றவாறு விரிவாக்க அலுவலர்கள் பதவிகளின் பெயர் மாற்றம் பின்னர் அறிவிக்கப்படும்.

16. கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர் தலைமையிலான கிராம ஊராட்சிகள் பிரிவில் உள்ள பணியிடங்களில் பணியாற்றுபவர்களுக்கு ஊதியம் பெற்று வழங்குதல், விடுப்புகள் அனுமதித்தல் போன்ற (வட்டார வளர்ச்சி அலுவலருக்கு இருக்கும்) அதிகாரங்கள் கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலருக்கு கொடுத்து தற்போது, அரசு ஆணையிடப்படுகிறது. இது தொடர்பாக, மேலும் அரசாணை ஏதும் தேவை என்றால், அதற்கான செயற்குறிப்பை ஊரக வளர்ச்சி இயக்குநர் அரசுக்கு அனுப்ப வேண்டும்.

17. இந்த அரசாணை, அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் பொருந்தும்.


18. இந்த அரசாணை நிதித்துறையின் 143.JS(LSR)/97 எண்ணும் .6.97 நாளும் இட்ட அலுவல் சார்பற்ற குறிப்பில் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகின்றது

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ்.நாராயண்**
அரசு செயலாளர்

இணைப்பு

மாதிரி பணி ஒதுக்கீடு ஊராட்சிப் பிரிவு (அரசாணையின் பத்தி 15–ஐப் பார்க்கவும்)



## 2. IMPORTANT G.Os

இணைப்பு

மாதிரி பணி ஒதுக்கீடு ஊராட்சிப் பிரிவு (அரசாணையின் பத்தி 15–ஐப் பார்க்கவும்)

